வணக்கம் குழந்தைகளே!






VMHSS&VNPS

# விரும்பி வேலை செய்யலாம்

## பாடம் -3


HJ7LGL

### 3. விரும்பி வேலை செய்யலாம்

வீட்டில் வேலை செய்யலாம்
விரும்பி நாமும் செய்யலாம்
படுக்கை சுருட்டி வைக்கலாம்
தரையைக் கூட்டிப் பெருக்கலாம்

உண்ணும் தட்டைக் கழுவலாம்
உடுத்தும் உடைகள் மடிக்கலாம்
கடையில் பொருள்கள் வாங்கலாம்
செடிகள் நட்டு வளர்க்கலாம்

இந்த வேலை பெரிதென
ஏற்றத்தாழ்வு இல்லையே!
எந்த வேலை ஆயினும்
எல்லாருமே செய்வோமே!

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

13

# நாங்கள் நண்பர்கள்

## பாடம் - 4




ஜெரின்
நன்றாகப் படங்கள் வரைவான்.
பூச்செடிகள் வளர்க்கிறான். வண்ணப் பூக்களைக் கண்டு மகிழ்வான்.
படக்கதைகளை விரும்பிப் படிப்பான்.
மேகங்களில் வெவ்வேறு உருவங்களைக் கண்டு மகிழ்வான்.
வம்புப் பேச்சுகளைத் தவிர்ப்பான்.
இனிப்புப் பண்டங்களை விரும்பிச் சாப்பிடுவான்.

## அ) பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| 1. | படுக்கை | - | மடிக்கலாம் |
| 2. | உடுத்தும் உடைகள் | - | நட்டு வளர்க்கலாம் |
| 3. | கடையில் | - | சுருட்டி வைக்கலாம் |
| 4. | உண்ணும் தட்டை | - | பொருள்கள் வாங்கலாம் |
| 5. | செடிகள் | - | கழுவலாம் |

## ஆ) சரியா? தவறா? என எழுதுக:


1. ஜெரினுக்கு வம்புப் பேச்சுகள் பிடிக்கும். ☐
2. ஆதிக்குத் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். ☐
3. தமிழினி தயக்கமின்றிப் பேசுவாள். ☐
4. ஜெரின், ஆதி, தமிழினி மூவரும் உடன்பிறந்தவர்கள். ☐


# மருத்துவக்குறிப்பு


நரம்புகளைப் பலப்படுத்துவதால்
பார்வை குணமடையும்.
உடலின் எந்த பகுதியில் புற்றுநோய்
இருந்தாலும் துளசி நீர் அதனை
முழுவதும் குணமாக்கும்.
துளசி நீர் தினமும் குடிப்பதால் வாய்
துர்நாற்றம் மறையும்.
துளசி நீரை தொடர்ந்து பருகினால்
நீரழிவு நோய் நெருங்காது.





இன்று நாம் (28.01.2022) பாடநோட்டில் எழுத உள்ளோம். பாட நோட்டில் கையெழுத்து அழகாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். தமிழ் பாட நோட்டில் (இரு கோடு நோட்டு) **(2 line note )** எழுதவும்.




ஆ) விடையளி:
1. விண்வெளிக்குச் சென்றவர்களின் பெயரை எழுதுக.
* ராகேஷ் ஷர்மா
* கல்பனா சாவ்லா


2. உனக்குப் பிடித்த வேலைகளை எழுதுக.
* உண்ணும் தட்டை கழுவுதல்.
* செடிகள் நட்டு வளர்த்தல்.


பாடம்-4
நாங்கள் நண்பர்கள்
அ) பொருள் தருக:
1. ஆர்வம் = விருப்பம்
2. சினம் = கோபம்
3. கனி = பழம்



ஆ) எதிர்ச்சொல் தருக:
1. அதிகம் x குறைவு
2. வினா x விடை
3. சத்தம் x அமைதி


இ. பிரித்து எழுதுக:


1. தயக்கமின்றி - தயக்கம் + இன்றி
2. பூச்செடிகள் - பூ + செடிகள்
3. படக்கதை - படம் + கதை

ஈ. சேர்த்து எழுதுக:

1. நாய் + குட்டி - நாய்க்குட்டி
2. திரை + படம் - திரைப்படம்
3. புதிர் + கதை - புதிர்க்கதை


உ. விடையளி:
1. ஆதி எதை விரும்பிச் சாப்பிடுவான்?
ஆதி பழங்களை விரும்பி
சாப்பிடுவான்.


2. தமிழினி எந்தக் கதைகளை
விரும்பிப் படிப்பாள்?
தமிழினி புதிர்க்கதைகளை
விரும்பிப் படிப்பாள்.


3. நண்பர்கள் மூவரில் உனக்குப்
பிடித்தவர் யார்? ஏன்?
நண்பர்கள் மூவரில்
எனக்குப் பிடித்தவர் ஜெரின்.
ஏனென்றால் அவனுக்கு
வம்புப்பேச்சு பிடிக்காது.

இன்று நாம் (28.01.2022) கையெழுத்துப் பயிற்சி எழுத உள்ளோம். கையெழுத்து நோட்டில் (இரு கோடு நோட்டு) **(2 line note )** எழுதவும். கையெழுத்து அழகாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.

## கையெழுத்துப் பயிற்சி




**நன்றி**